**செய்தி வெளியீடு எண்.605** **நாள்.25.07.2008**

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாட்டில் மருத்துவக் கல்வி மற்றும் செவிலியர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து அரசுத் துறையிலும் அரசு அனுமதி பெற்ற சுயநிதி தனியார் நிறுவனங்களிலும் புதிய கல்லூரிகளைத் தொடங்க தமிழக அரசு ஆணைகள் வழங்கியுள்ளது. இதனால் மருத்துவக் கல்வியில் பயன் பெறுவோர் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது. மருத்துவம் சார்ந்த கல்வித்துறையில் சான்றிதழ் படிப்புகளும் பட்டயப் படிப்புகளும் அரசு மருத்துவக் கல்லூரிகளில் போதிய அளவில் இல்லாததால் தமிழ்நாட்டின் நகர்புறங்களிலும் ஊரகப் பகுதிகளிலும் அரசின் அனுமதி பெறாமல் நடத்தப்படும் கல்வி நிறுவனங்கள் பெருகியுள்ளன. இக்கல்வி நிறுவனங்களில் அதிகப்படியான கட்டணம் செலுத்தி அரசு அங்கீகாரம் இல்லாத சான்றிதழ்களைப் பெற்று தகுந்த வேலை வாய்ப்பின்றி மாணவர்கள் துன்பப்படும் நிலை உள்ளது. இதைக் களையும் வகையில் அரசு மருத்துவக் கல்லூரிகள் அனைத்திலும் கீழ்கண்ட 11 மருத்துவத் தொழில் சார்ந்த சான்றிதழ் படிப்பு பிரிவுகள் மற்றும் பட்டயப் படிப்பு பிரிவுகளில் 5000 மாணவர்கள் சேர்ந்து படிக்க ஒப்புதல் அளித்துள்ளது.

**ஒரு வருட சான்றிதழ் படிப்புகள்**

| | | |
|---|---|---|
| 1. | இதய எதிர்மெல் ஒலி இயல் நுட்புனர் | Cardio Sonography Technician |
| 2. | இதய மின்அலை வரைவு நுட்புனர் | ECG / Treadmill Technician |
| 3. | இதய இரத்தச் சுழற்சி (பம்ப்) நுட்புனர் | Pump Technician |
| 4. | இதய உட்புகுத்து ஆய்வக நுட்புனர் | Cardiac Cath. Lab. Technician |
| 5. | அவசரக் கவனிப்பு நுட்புனர் | Emergency Care Technician |
| 6. | சுவாசக் கவனிப்பு நுட்புனர் | Respiratory Care Technician |
| 7. | இரத்த சுத்திகரிப்பு நுட்புனர் | Dialysis Technician |
| 8. | மயக்கவியல் நுட்புனர் | Anaesthesia Technician |
| 9. | அறுவை அரங்க நுட்புனர் | Theater Technician |
| 10. | முடநீக்கியல் நுட்புனர் | Ortho Technician |
| 11. | சான்றிதழ் பெற்ற நுண்கதிர் உதவியாளர் | C.R.A. (Certified Radiological Assistant) |

**இரண்டு வருட பட்டயப் படிப்பு**

| | | |
|---|---|---|
| 12. | மருத்துவ ஆய்வக நுட்புனர் | DMLT (Diploma in Medical Lab. Technology) |

**வயது வரம்பு**

மேற்கண்ட படிப்புகளில் சேர மாணவ / மாணவியர்களின் வயது வரம்பை குறைந்தபட்சம் 17 ஆகவும் அதிகப் பட்சம் 30 ஆகவும் மற்றும் தாழ்த்தப்பட்ட / பழங்குடியினரின் அதிகபட்ச வயது வரம்பு 35 ஆகவும் அரசு நிர்ணயித்துள்ளது.

**கல்விக் கட்டணம்**

கல்விக் கட்டணமாக ஒராண்டு சான்றிதழ் படிப்பிற்கு மொத்தக் கட்டணமாக ரூ.1450/–ம், இரண்டு ஆண்டு பட்டயப் படிப்பிற்கு ஆண்டுக்கு ரூ.1200/–ம் நிர்ணயக்கப்பட்டுள்ளது.

**நிறுவனங்கள் மற்றும் படிப்புகள் பற்றிய தகவல்**

மேற்கண்ட மருத்துவம் சார்ந்த படிப்புகள் நடப்பு கல்வி ஆண்டில் 14 மருத்துவக் கல்லூரிகளிலும், மருத்துவ ஆய்வக நுட்புனர் பட்டயப் படிப்பு சென்னை அரசு கிங் நோய் தடுப்பு நிலையத்திலும் நடத்தப்படும். குறிப்பிட்ட அரசு மருத்துவக் கல்லூரியில் எந்தெந்த படிப்புகள் நடத்தப்படுகின்றன என்பது குறித்த விவரங்களை தகவல் தொகுப்பேட்டில் சரிபார்த்த பின் உரிய மருத்துவக் கல்லூரிக்கு விண்ணப்பம் அனுப்புமாறு விண்ணப்பதாரர்கள் கோரப்படுகிறார்கள்.

**விண்ணப்பம் வழங்கப்படும் காலம் / இறுதி நாள் :**

25.07.2008 முதல் விண்ணப்பங்கள் மற்றும் தகவல் தொகுப்பேடு 14 அரசு மருத்துவக் கல்லூரிகளிலும், அரசு கிங் நோய்த் தடுப்பு நிலையத்திலும் (டி.எம்.எல்.டி) வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தகுந்த இணைப்புகளுடன் உரிய மருத்துவக் கல்வி நிலையத்தில் சேர்ப்பிக்க கடைசி நாள். 08.08.2008.

**கல்வித் தகுதி**

சான்றிதழ் பெற்ற நுண்கதிர் உதவியாளர் உள்ளிட்ட 11 ஓராண்டு சான்றிதழ் படிப்புகளில் சேர பள்ளி உயர்நிலை தேர்வில் விஞ்ஞான பாடங்கள் படித்து தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். இயற்பியல், வேதியியல், உயிரியல், படிப்புகளுடன் செவிலியர் பாடப் பிரிவு படித்த மாணவர்களும் விண்ணப்பிக்கலாம். மருத்துவ ஆய்வக நுட்புனர் பட்டயப் படிப்பிற்கு பொது

பிரிவு, பின் தங்கிய வகுப்பு மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சார்ந்த மாணவர்கள் விஞ்ஞான பாடங்களில் 45 சதவிகிதம் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்பினர் தேர்ச்சி பெற்றிருந்தால் விண்ணப்பிக்கலாம். தொழில் சார்ந்த மருத்துவ ஆய்வக நுட்பநர் (Vocational M.L.T.) பாடம் படித்தவர்கள் மருத்துவ ஆய்வக நுட்பநர் பட்டய படிப்பிற்கு விண்ணப்பிக்கலாம்.

**அரசு 2008–2009–ம் ஆண்டில் அறிமுகப்படுத்தியுள்ள கூடுதல் சலுகைகள்**

**1) வயது வரம்பு**

மருத்துவம் சார்ந்த சான்றிதழ் படிப்புகள் மற்றும் மருத்துவ ஆய்வக நுட்புநர் பட்டயப் படிப்பில் சேர விண்ணப்பதாரர்களின் அதிகபட்ச வயது வரம்பு 5 ஆண்டுகள் கூடுதலாக்கப்பட்டுள்ளது. பொது பிரிவு, பின்தங்கிய வகுப்பு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் – 17 வயது முதல் 30 வயது வரையிலும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் 17 வயது முதல் 35 வயது வரையிலும் விண்ணப்பிக்கலாம்.

**2) கல்வித் தகுதி**

அ) சான்றிதழ் பெற்ற நுண்கதிர் உதவியாளர் படிப்பு உள்ளிட்ட 11 ஓராண்டு சான்றிதழ் படிப்புகளில் சேர குறைந்தபட்ச கல்வித் தகுதியாக அரசு மேல்நிலை தேர்வில் அறிவியல் பாடப்பிரிவில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

ஆ) மருத்துவ ஆய்வக நுட்புநர் பட்டயப் படிப்பில் சேர குறைந்த பட்ச கல்வித் தகுதியாக பொதுப்பிரிவினர், பின்தங்கிய வகுப்பு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு அரசு மேல்நிலைத் தேர்வில் அறிவியல் பாடங்களில் 45 சதவீதம் மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சியடைந்திருக்க வேண்டும்.

இ) தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்பினர் மருத்துவ ஆய்வக நுட்புநர் பட்டயப் படிப்பில் சேர குறைந்த பட்ச கல்வித் தகுதியாக அரசு மேல்நிலைத் தேர்வில் அறிவியல் பாடங்களில் தேர்ச்சியடைந்திருக்க வேண்டும்.

**3) வகுப்புவாரி சுழற்சி**

பொதுப்பிரிவு, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் தாழ்த்தப்பட்ட / பழங்குடியின வகுப்பினர் பிரிவைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு தற்பொழுது நடைமுறையிலுள்ள வகுப்புவாரி சுழற்சி பின்பற்றப்படும். பின்தங்கிய வகுப்பினரில் தற்போது நடைமுறையிலுள்ள 30 சதவீதத்தில், பின்தங்கிய கிறிஸ்தவர்களுக்கு 3.5 சதவீதமும், பின்தங்கிய இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவீதமும், ஒதுக்கி வெளியிடப்பட்ட ஆணை பின்பற்றப்படும்.

**4) உள்ளுறை பயிற்சி**

மருத்துவம் சார்ந்த சான்றிதழ் படிப்புகள் மற்றும் மருத்துவ ஆய்வக நுட்புநர் பட்டயப் படிப்பில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு விரிவான செயல்முறை பயிற்சி கொடுப்பதற்காக 3 மாத கட்டாய உள்ளுறைப் பயிற்சி வழங்க அரசு ஆணை வழங்கியுள்ளது. இப்பயிற்சி அவர்கள் ஏற்கனவே படிக்கும் துறைகள் மற்றும் கல்லூரிகளிலேயே வழங்கப்படும். உள்ளுறைப் பயிற்சி முடித்தவர்களுக்கு அரசு சான்றிதழ் வழங்கப்படும்.

**5) வேலை வாய்ப்பு**

மேற்கண்ட படிப்புகள் மற்றும் உள்ளுறைப் பயிற்சிகளில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள் இந்தியாவிலும், வெளிநாட்டிலும் உள்ள தனியார் மருத்துவமனைகளில் வேலை வாய்ப்புப் பெற மிகவும் பயனுள்ளதாக இருக்கும். ஆகவே, பொது மக்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளலாம். அரசு அங்கீகாரம் பெறாத மருத்துவம் சார்ந்த கல்வி நிலையங்கள் நடத்தும் படிப்புகளில் சேர வேண்டாம் என்று பொது மக்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். அரசு அங்கீகாரம் பெற்ற மருத்துவம் சார்ந்த கல்வி நிலையங்கள் நடத்தும் ஓராண்டு சான்றிதழ் மற்றும் இரண்டாண்டு பட்டய படிப்புகளில் சேர்ந்து பயனடையுமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

எம். ஆர். கே. பன்னீர்செல்வம்
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**